1990 ஏப்ரல் 6]

அதைக் கூட அவையிலே அறிக்கை மூலமாக அன்றைக்கு தாக்கல் செய்தேன். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் எங்கே இருந்தார் என்பது தெரியவில்லை. இதே போன்று பாமாயிலும் 1,500 மெட்ரிக்டன்னிலேயிருந்து1,250 ஆக குறைக்கப்பட்டது. பின்னாலே 2,100 மெட்ரிக் டன் இன்றைக்கு உயர்த்தி தரப்பட்டிருக்கிறது. பாமாயில் குறைவாக வருவதற்கு காரணம் பாமாயிலை இறக்குமதி செய்வதிலே ஏற்பட்டுள்ள அன்னியச் செலாவணி தொடர்பான சங்கடங்களை அல்லாமல் வேறு ஏதும் அல்ல என்பதையும் குறிப்பிட்டு தெரிவிக்க விரும்புகிறேன். கோதுமையை வேண்டுமென்ற அளவுக்கு மத்திய அரசு கொடுக்கிறது. ஆனால் மக்களுக்கு அதை வாங்கி சாப்பிடக் கூடிய மன நிலை இல்லாத காரணத்தால் ஒதுக்கப்பட்ட கோதுமையைக் கூட முழுவதுமாக எடுக்க முடியாத சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். எனவே ஆட்சிமாற்றம் என்பது கணிசமான நன்மையை தமிழகத்திற்கும் தமிழக மக்களுக்கும் வழங்கியிருக்கிறது. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

வேளாண்மை அலுவலர்கட்கு நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரம்

***வினா 3331.ஏஏ—திரு. ந. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மை அலுவலர்கட்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களைப் போன்று நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரங்கள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ந. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் மழை குறைவாக இருப்பதாலும், நிலத்தடிநீர் குறைந்ததாலும், கரும்பு, வாழை போன்ற பணப் பயிர்களை விவசாயிகள் பயிரிடச் சென்று விடுவதால் நெல் உற்பத்தி செய்யப்படும் பரப்பளவு குறைந்ததாலும் அரிசி உற்பத்தியை சரியான நிலையில் விளைவிக்க விவசாயிகளுக்கு தொழில் நுட்பம் மூலமாக பெருக்கி, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஈடு கொடுத்து உணவு நிலையை பெருக்கி வருகிறது விவசாயத் துறை. அப்படிபட்ட விவசாயத்துறையில் வேளாண்மை வளர்ச்சி அலுவலகங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது உள்ளன. விவசாயிகள் காய்கறி விதைகள் வேண்டுமென்று அங்கு சென்று கேட்டால்

அதற்கு தோட்டக் கலை துறையை கேளுங்கள் என்று பதில் கூறுகிறார்கள். மேலும் அவர்களிடம் தென்னங்கன்றுகள் வேண்டுமென்று விவசாயிகள் கேட்டால் எண்ணெய் வித்துத் துறையை கேளுங்கள் என்று கூறுகிறார்கள். எனவே விவசாயிகள் சிரமப்படுகிற நிலை தற்போது இருக்கிறது. எனவே அனைத்தும் வேளாண்மை வளர்ச்சி அலுவலகத்திலே கேட்டு தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்துப் பொருட்களும் அவர்களே கொடுப்பதற்கு அரசு வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் கேள்விகளுக்கு இடமும் இல்லை என்று கருதுகிறேன்.

பாசன வசதி.

* 7262. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாசன ஏரி, குளங்களில் தண்ணீர் கிடைக்காத நேரத்தில் ஏரி, குளங்களின் மத்தியில் அரசு குழாய் கிணறுகளை நிறுவி மோட்டார் பம்பு செட்டு அமைத்து பாசன வசதி அளிக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; ஆண்டுதோறும் மழையின் அளவானது குறைந்து கொண்டே வருகிற இந்தச் சூழ்நிலையில் ஏரிப் பாசனத்தை மட்டும் நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிற விவசாய மக்களுக்கு அவர்களுடைய பயிரை பாதுகாக்க இதேபோன்று ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முன் இதே மன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்பு குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு இதே போன்று பாசன வசதி